செ.வெ.எண் : 60 நாள் : 26.07.2026

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டம் செம்போடை கிராமத்தில் உப்பனாற்று கரையில் "நம்ம நாகை கூட்டம்" இரண்டாவது நிகழ்ச்சியாக இன்று (26.7.2026) உலக அலையாத்திக் காடுகள் தினத்தை முன்னிட்டு அலையாத்திக் கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.,அவர்கள் கலந்து கொண்டு,அலையாத்திக் கன்றுகளை நட்டு வைத்தார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டம் செம்போடை கிராமத்தில் உப்பனாற்று கரையில் "நம்ம நாகை கூட்டம்" இரண்டாவது நிகழ்ச்சியாக இன்று (26.7.2026) உலக அலையாத்திக் காடுகள் தினத்தை முன்னிட்டு அலையாத்திக் கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.,அவர்கள் கலந்து கொண்டு,அலையாத்திக் கன்றுகளை நட்டு வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது...

ஒவ்வொரு மாதமும் நம்ம நாகை கூட்டம் மூலம் பல்வேறு பணிகள் மேற்கொள்ள திட்டமிட்டு,அதன்படி முதல் நிகழ்ச்சி நாகூர் கடற்கரை தூய்மை பணிகள் மேற்கொண்டோம் அடுத்ததாக இன்று செம்போடை கிராமத்தில் உப்பனாற்று கரை பகுதியில் அலையாத்தி கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. நம்ம நாகை கூட்டத்திற்காக ஒரு டெலிகிராம் சேனல் உருவாக்கி உள்ளோம். இதனுடைய லிங்க்கும் மாவட்ட ஆட்சியர் இன்ஸ்டாகிராம் சமூக ஊடக லிங்க்ல் உள்ளது. ஒவ்வொரு மாதமும் இரத்த தானம் முகாம், பழைய துணிகள்ல, கொடுக்கக்கூடிய, ஒரு நிகழ்ச்சி, பழைய புத்தகங்கள் கொடுக்கக்கூடிய, நிகழ்ச்சி என பல்வேறு சமூக பொறுப்புள்ள நிகழ்வுகள் நடத்த திட்டமிட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இன்று உலக அலையாத்திக் காடுகள் தினத்தை முன்னிட்டு அலையாத்திக் கன்றுகள் நடும் நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள மக்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அலையாத்திக் காடுகள் (மாங்குரோவ் காடுகள்) உலகின் மிகத் தனித்துவமான மற்றும் மதிப்புமிக்க கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஒன்றாகும். கடல் நீரும் நன்னீரும் சங்கமிக்கும் முகத்துவாரங்களில் இவை இயற்கையாகவே வளர்கின்றன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் அக்கரைப்பேட்டை, தலைஞாயிறு, வேதாரண்யம் மற்றும் கோடியக்கரை ஆகிய பகுதிகளில் பரந்த அளவிலான அலையாத்திக் காடுகள் காணப்படுகின்றன.

அலையாத்திக் காடுகள் சூறாவளி, சுனாமி, புயல் அலைகள், வெள்ளம் மற்றும் கடலோர அரிப்பு ஆகியவற்றிற்கு எதிராக இயற்கையான அரண்களாகச்

செயல்படுகின்றன. அவை அலைகளின் ஆற்றலைக் குறைப்பதன் மூலம் கடலோர சமூகங்களையும் உள்கட்டமைப்புகளையும் பாதுகாக்கின்றன.

இவை மீன்கள், இறால்கள், நண்டுகள் மற்றும் பல கடல் உயிரினங்களின் இனப்பெருக்க நிலங்களாகவும் (நர்சரி) செயல்படுகின்றன. ஊட்டச்சத்துக்கள் நிறைந்த வண்டல் மண்ணும், மட்கிய இலைகளும் இப்பகுதியின் செழிப்பான பல்லுயிர் பெருக்கத்திற்கு ஆதரவளிப்பதோடு, கடலோர சமூகங்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துகின்றன. பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்கவும், நிலையான எதிர்காலத்தை உறுதிப்படுத்தவும் அலையாத்திக் காடுகளைப் பாதுகாப்பதும், அவற்றை மீண்டும் உருவாக்குவதும் இன்றியமையாததாகும்.

உலக அலையாத்திக் காடுகள் தினத்தை முன்னிட்டு, எதிர்கால சந்ததியினருக்காக அலையாத்திக் காடுகளைப் பாதுகாக்கவும், அவற்றை விரிவுபடுத்தவும் நாம் உறுதியேற்போம். ”அலையாத்திக் காடுகளைப் பாதுகாப்போம் - நமது கடற்கரை, காலநிலை மற்றும் எதிர்காலத்தைப் பாதுகாப்போம்.” என மாவட்ட ஆட்சியர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக உலக அலையாத்திக் காடுகள் தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் செம்போடை கிராமத்தை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு,அலையாத்திக் கன்றுகளை நட்டு வைத்தார்கள்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் திரு.ரமேஷ்வரன் அவர்கள், வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் திரு.கண்ணன், வட்டாட்சியர் திரு.ஜெயசீலன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ராஜீ அவர்கள், திரு.சிங்கார வேல் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.